

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் அவர்களின் 110-வது பிறந்த நாளையொட்டி, நாகர்கோவிலில் உள்ள ப. ஜீவானந்தம் மணி மண்டபத்தில், அன்னாரது திருவுருவ சிலைக்கு, இன்று (21.08.2016) மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 552 /2016 நாள்: 21.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பொதுவுடைமை விரர் ப. ஜீவானந்தம் அவர்களின் 110-வது பிறந்த நாளையொட்டி, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில், கன்னியாகுமரி, அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்டபம் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், இடலாக்குடி சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில் மார்ஷல் நேசமணி மணி மண்டபம் மற்றும் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணி மண்டபம் என ஐந்து மண்டபங்கள், செய்தி மக்கள் தொடர்பு துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மணி மண்டபங்களில் உள்ள தலைவர்களின் சிலைக்கு ஆண்டு தோறும், பிறந்தநாள் மற்றும் நினைவு நாளன்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்கவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் அவர்களின் 110-வது பிறந்த நாளையொட்டி, நாகர்கோவிலில் அமைந்துள்ள ப. ஜீவானந்தம் மணிமண்டபத்தில், அன்னாரது திருவுருவ சிலைக்கு இன்று (21.08.2016) மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட பால் வளத்தலைவர் திரு. எஸ்.எ.அசோகன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் திரு. கே. பகவதி பெருமாள், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர் திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. நாஞ்சில் சந்திரன், திரு. கனகராஜ், திரு. வேல்முருகன், ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.